# தமிழக – வடஇலங்கைப் பண்பாட்டு உறவுகள்: பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியை அடிப்படையாகக் கொண்டது

**சாந்தினி அருளானந்தம்**

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

*shanthiniar09@gmail.com*

***ஆய்வுச் சுருக்கம்:*** *இலங்கையின் வரலாற்றில் காலத்துக்குக் காலம் அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் செல்வாக்கை ஏற்படுத்திய வகையில் இந்திய நாட்டிற்குக்குக் குறிப்பாகத் தமிழகத்திற்குப் பிரதான இடமுண்டு. அந்த உறவுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இற்றை வரை நீடித்திருப்பதை அவதானிக்கலாம். ஆயினும் அந்தந்தக் காலகட்டங்களில் இருநாடுகளிலும் நிலவிய சூழ்நிலைகளுக்கேற்ப செல்வாக்குகளின் நிலைகளில் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளதை வரலாற்றுச் சான்றுகளின் துணைக்கொண்டு கண்டுகொள்ள முடிகின்றது. இப்பின்னணியில் நோக்கும்போது 19ஆம் நூற்றாண்டில் இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் பண்பாட்டு ரீதியில் கொண்டும் கொடுத்தும் இருந்ததெனலாம். இலங்கையில் ஆறுமுகநாவலர் காலத்தில் சைவமறுமலர்ச்சியின் பின்புலத்தில் இயங்கிய அறிஞர்கள், அவர் மறைந்த பின்பும் தமிழ்நாட்டுடன் நெருங்கிய உறவினைப் பேணினர். இதனால் இருபகுதிகளிலும் பண்பாட்டு இணைப்பு வலுவடைந்திருந்தது. அத்தகைய பண்பாட்டு உறவுகளுக்கான பின்னணியைக் விளங்கிக் கொள்வதும் எத்தகைய பண்பாட்டு உறவுகள் காணப்பட்டன என்பதைக் கண்டறிவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். வரலாற்று ஆய்வு அணுகுமுறை மற்றும் பண்பாட்டு ஆய்வு அணுகுமுறையைப் பின்பற்றி இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது. மேலும் இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாக அக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்களது இலக்கியங்கள், மற்றும் சமகாலப் பத்திரிகைகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் இரண்டாம் நிலைத் தரவுகளாக மலர்கள், நூற்றாண்டு சிறப்பிதழ்கள், நூல்கள் மற்றும் பத்திரிகைகள் இவ்வாய்வுக்குத் துணைநின்றமை குறிப்பிடத்தக்கது. பிற உறவுகளை விடவும் பண்பாட்டு அடிப்படையிலான உறவுகள் பலம் மிக்கவையாகும். அதிலும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரு பிராந்தியங்களிலும் காணப்பட்ட உறவுகள் சைவ மற்றும் மொழியுணர்வவைப் வலுப்படுத்த உதவியுள்ளன என்பதை மறக்கமுடியாது. இவ்விணைப்பு தமிழக – வடஇலங்கை உறவில் முக்கியமான காலகட்டதைக் குறித்து நின்றதெனலாம்.*

**திறவுச்சொற்கள்:** சைவம், மறுமலர்ச்சி, பண்பாடு, கோயில், யாழ்ப்பாணம்.

## 1. அறிமுகம்

இந்துசமுத்திரத்தின் மத்தியிலே காணப்படுகின்ற இலங்கைக்கு மிகவும் அண்மித்த ஒருநாடாக இந்தியநாடு அமைந்துள்ளதோடு, இலங்கையின் குடியேற்றங்கள், அரசியல், பொருளாதாரம் பண்பாடு என்பவற்றில் ஆழமான செல்வாக்கை நிலைநாட்டிய நாடாகவும் இருப்பதை வரலாற்று அடிப்படையில் கண்டுகொள்ள முடிகின்றது. அதிலும் வடஇலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே நீண்டகாலமாக நெருங்கிய தொடர்புகள் இருந்து வந்துள்ளமைக்குப் பலசான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தொடர்புகள் காரணமாகத் தமிழ்நாட்டைத் தாய்நாடெனவும், வடஇலங்கையைச் சேய்நாடெனவும் குறிப்பிடுவது வழக்கம். மேலும் தாய்நாட்டின் பெரும்பாலான அம்சங்கள் சேய்நாட்டில் இன்றுவரை நின்று நிலவி வருவது இருநாடுகளுக்கிடையிலான பிணைப்பினை மேலும் உறுதிப்படுத்துகிறது. இருநாட்டு ஊர்ப்பெயர்களிலும் கூட ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வாறான உறவுகள் இவ்விரு பிராந்தியங்களுக்கிடையே நிலவி வந்தாலும் பண்பாட்டு ரீதியான உறவுகள் பலமிக்கவையாகவும் முக்கியத்துவமுடையனவாகவும் இருந்ததை அவதானிக்கலாம். “இலங்கையில் (ஈழம்) உள்ள இந்துசமய மரபுகள் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் இலங்கைக்கும் இடையில் அமைந்த நெருங்கிய தொடர்புகளின் காரணமாக வலுப்பெற்று வந்தன. தென்னிந்தியாவும் இலங்கையும் ஆதிகாலம் முதலாக ஒரு வர்த்தக வலயமாக இணைந்திருந்தன. அவற்றிடையே நிலவிய இடையறாத தொடர்புகளின் காரணமாகக் குறிப்பாகத் தமிழகத்தில் ஏற்பட்ட சமயப் பண்பாட்டு வளர்ச்சிகளும் இலங்கையில் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்திவந்தன’’ (பத்மநாதன்,2000.பக்.4-5). இக்கூற்று இந்திய குறிப்பாக தமிழக – வடஇலங்கைப் பண்பாட்டு உறவினை எடுத்துக் காட்டுவதுடன் தமிழகத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு நிலைமைகளில் வடஇலங்கையினர் செல்வாக்குச் செலுத்தியதையும் எடுத்துக்காட்டுகின்றது.

### 1.1 ஆய்வின் நோக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியை அடிப்படையாகக் கொண்ட தமிழக வடஇலங்கைப் பண்பாட்டு உறவுகள் குறித்த இவ்வாய்வானது இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆறுமுகநாவலர் மறைந்த பின்பும் வடஇலங்கையின் அறிஞர்கள் தமிழ்நாட்டுடன் நெருங்கிய உறவினைப் பேணினர். இதனால் இருபகுதிகளிலும் பண்பாட்டு இணைப்பு வலுவடைந்திருந்தது. அத்தகைய பண்பாட்டு உறவுகளுக்கான பின்னணியைக் விளங்கிக் கொள்வதும் எத்தகைய பண்பாட்டு உறவுகள் காணப்பட்டன என்பதைக் கண்டறிவதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

### 2. ஆய்வு முறையியல்

தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையிலான பண்பாட்டு உறவுகளுக்கு நீண்டகால வரலாற்றைக் கொண்டதாகும். வடஇலங்கைக்கு அண்மையில் தமிழகம் காணப்படுகின்றமையால் நீண்ட காலமாக இரு பிராந்தியங்களுக்குமிடையே தொடர்புகள் காணப்பட்டன. இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் தமிழகத்தின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டமையைத் தொல்லியல், மானிடவியல், மரபணுவியல் சான்றுகள் புலப்படுத்துகின்றன. இருப்பினும் 19ஆம் நூற்றாண்டில் இவ்வுறவுகள் சமயமறுமலர்ச்சியின் அடிப்படையிலும் வரலாற்று ஒற்றுமை, மொழி, மற்றும் அடையாளம் போன்றவற்றைப் பேணிப்பாதுகாக்கும் பின்னணியிலும் வளர்ச்சி பெற்றிருந்தமையால் இவ்வாய்வு பண்பாட்டு ஆய்வுமுறையியலைப் பின்பற்றி பண்புசார் ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்றது. மேலும் வரலாற்று ஆய்வு முறையியலின் பின்னணியில் ஆறுமுகநாவலர் காலத்துச் சூழ்நிலைகளின் செல்வாக்கினுடைய தொடர்ச்சியாக இக்காலப்பகுதி கவனத்தில் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வுக்கான மூலாதாரங்களைப் பொறுத்தவரை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருபிராந்தியங்களிலும் ஊடாடிய அறிஞர்களது நூல்கள் முதலாம் நிலைச்சான்றுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்காலப்பகுதி பற்றி ஆராய்ந்த அறிஞர்களது நூல்கள், கட்டுரைகள் போன்றன இவ்வய்வில் இரண்டாம் நிலைத்தரவுகளாக பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 3. கலந்தாய்வும் பெறுபேறும்

19ஆம் நூற்றாண்டினைப் பொறுத்தவரை இருநாடுகளிலும் பிரித்தானியர் ஆட்சி ஏற்பட்டமையும், இவ்வரசின் ஆதரவோடு கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு கிறிஸ்தவ மிசனரிகள் முயன்றமையும் இந்துசமயத்தை வீழ்ச்சியடையச் செய்தன. இந்நிலமைகளிலிருந்து இந்துசமயத்தை மீட்டெடுக்கவும், மீளநிலைநாட்டவும் இருநாடுகளிலும் சமய இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இவ்வியக்கங்கள் தோன்றும் வரை தமிழகத்தின் செல்வாக்கே அதிகமாக வடஇலங்கையில் ஏற்பட்டிருந்தாலும் பின்னர் அந்நிலையில் மாற்றம் ஏற்படுவதைக் காணலாம். இதற்குப் பிரதான காரணமாக இருந்தவர் ஆறுமுகநாவலராவர். இவர் கிறிஸ்தவத்திற்கு எதிராக சைவமறுமலர்ச்சி நடவடிக்கைகளை ஈழத்தைக் கடந்து தமிழ்நாட்டிலும் மேற்கொண்டார். இதனாலேயே வித்தியானந்தன் நாவலரை “தமிழ்நாட்டை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி” எனக் குறிப்பிடுகின்றார் (வித்தியானந்தன்,1969.ப.125). இக்கூற்று தமிழகத்தில் இலங்கையின் செல்வாக்கு நாவலருடன் ஆரம்பிப்பதன் தன்மையில் அமைந்துள்ளதெனலாம். நாவலர் வாழ்ந்தகாலத்தில் இவ்விருநாடுகளுக்கிடையே இருந்த தொடர்புகள் பற்றிக் கைலாசபதி பின்வருமாறு கூறுகின்றார்.

> “19ஆம் நூற்றாண்டிலே தமிழகத்திலும் ஈழத்திலும் (வட இலங்கை) வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் மிகவும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். போக்குவரத்து வசதிகளும், தொடர்பாடற் சாதனங்களும் மிக அருகலாக இருந்த அக்காலத்தில் தமிழ் அறிஞர்களும், புலவர்களும், கவிராயர்களும், கணக்காயர்களும் அடிக்கடி சந்தித்து அளவளாவிப் பரஸ்பரம் உறவினைப் பரிமாறிக் கொண்டனர்” (கைலாசபதி, 1986.ப.11 (முகவுரை).

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரித்தானியரின் ஆட்சியால் ஏற்பட்ட போக்குவரத்து அபிவிருத்திகளும், தொடர்புசாதன விருத்திகளும் இவ்வாறான உறவுகளை மேலும் வலுப்படுத்தின. இதனால் இருபகுதிகளிலும் பண்பாட்டு இணைப்பு வலுவடைந்திருந்தது. இவை தமிழக - வட இலங்கைப் பண்பாட்டு உறவுகளுக்கான பின்னணியாகக் காணப்பட்டதெனக் கூறலாம்.

*ISBN: 978-955-627-013-6*

ஓர் இனத்தின் பண்பாட்டு அடித்தளமாகக் காணப்படுவது சமயமும் மொழியும் என்பதைப் பண்பாட்டு ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர். அவ்வகையில் தமிழக - வடஇலங்கைப் பண்பாட்டு உறவுகள் இந்துசமயத்தையும் தமிழ்மொழியையும் அடிப்படையாகக் கொண்டிருந்தமையை அவதானிக்கலாம். மேலும் தமிழக – வடஇலங்கை உறவு இருவகையாக அமைந்திருந்தமையும் கவனிக்கற்பாலது. அவ்வுறவு வடஇலங்கையிலிருந்து இந்தியாவை நோக்கியதாகவும், இந்தியாவிலிருந்து வடஇலங்கையை நோக்கியதாகவும் அடையாளம் காணமுடிகின்றது. இவ்விரு வழிபட்ட தொடர்புகள் இருநாட்டுச் சமய பண்பாட்டு வாழ்வு ஒன்றோடொன்று இயைந்து செல்லவும் வளர்ச்சியடையவும் வாய்ப்பினை வழங்கின. இத்தொடர்புகள் சிறப்பாக கல்வி, வணிகம், கோயில் வழிபாடுகள் மற்றும் பிற நடவடிக்கைகளினால் விருத்தியடைந்திருந்தன. இதனால் தமிழக – வடஇலங்கை உறவுகள் என்றுமில்லாதவாறு இருபக்கமாகவும் அதில் யாழ்ப்பாணத்தவரின் செல்வாக்கு அதிகமாக அங்கிருந்தததையும் அவதானிக்க முடிகின்றது.

## 3.1 தமிழகத்திலிருந்து வடஇலங்கையை நோக்கிய உறவுகள்

ஒல்லாந்தர் இலங்கையில் ஆட்சி செய்த காலத்திலேயே கல்வியின் பொருட்டு பரஸ்பர தொடர்புகள் ஏற்பட்டிருந்ததை அவதானிக்கலாம். கொச்சிக் கணேசையர், கூழங்கைத் தம்பிரான் போன்றோர் இலங்கையில் தமது மாணவ பரம்பரையை உருவாக்கியிருந்தனர். நாவலருடைய காலத்தில் சொக்கலிங்கச் செட்டியார், பொன்னோதுவார் போன்றவர்கள் இங்கு வந்து கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டோரில் குறிப்பிடத்தக்கனர். ந.ச.பொன்னம்பலப்பிள்ளையின் புராணபடனத்தில் செறிந்திருந்த இரசனையின் பொருட்டு யாழ்ப்பாணம் வந்தவரே வன்றொண்டர் செட்டியார். வணிகத்தின் பொருட்டு இந்தியாவிலிருந்து வந்த செட்டிமார் செய்த பணிகளும் இக்காலப்பகுதியில் சமய மற்றும் பண்பாட்டு வாழ்வில் புத்துணர்வை ஏற்படுத்தின. இலங்கையின் பலபாகங்களுக்கும் சென்ற இவர்கள் ஆங்காங்கு தமது குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு கோயில்களைக் கட்டுவித்தும், அவற்றினை நிர்வகித்தும், நிபந்தங்கள் செய்தும், வேறு பலபணிகள் ஆற்றியும் வந்தனர். பசுபதிச் செட்டியார் போன்ற பல செட்டிமார்கள் வடஇலங்கையில் நடைபெற்ற இந்துசமய மறுமலர்ச்சியில் பல்வேறு பங்களிப்புக்களைச் செய்துள்ளமை கவனிக்கத்தக்கது. 'ஆங்கிலேயராட்சியின் தொடக்கத்திலே தமக்கேற்பட்ட நிலைகுலைவுக்கு ஈடுசெய்யும் வகையில் சமுதாயத்தில் பக்கபலம் தேடிக்கொள்ளும் முகமாகச் சமயகலாசார மறுமலர்ச்சியில் இணைந்து கொண்டாதாக' (கைலாசபதி,1986.ப.86) செட்டி சமூகத்தினரை கைலாசபதி விமர்சித்தபோதும், இலங்கைத் தமிழ்மொழி மற்றும் இந்துப்பண்பாட்டின் வளத்திலும் வளர்ச்சியிலும் இவர்களது பங்கு முக்கியத்துவமுடையது என்பதை மறுக்கமுடியாது.

புனிதத்துவமும் பிரசித்தியும் பெற்ற ஆலயங்கள் உள்ளநாடாகப் பெருமை பெறுவது இந்தியநாடாகும். வடஇலங்கையிலும் பாடல் பெற்ற தலங்களும் மகிமை பொருந்திய இடங்களும் காணப்பட்டன. இதனாலும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் நெருக்கமடைய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. கோயில்களைத் தரிசிப்பதற்கும், நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கும், இறந்தோரின் அஸ்தியைக் கரைப்பதற்குமென ஈழத்திலிருந்து பலர் இந்தியாவுக்குச் சென்றனர். ஈழத்தவர் சென்ற சிறப்புமிக்க கோயில்களாக சிதம்பரம், இராமேஸ்வரம், காசி முதலான இடங்களிலுள்ள கோயில்கள் விளங்கின. ''யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் திருத்தில்லையில் (சிதம்பரம்) வந்து அம்பலவாணரை வழிபடுதலிலும் அங்கு வசித்தலிலும் பெருவிருப்புடையவர்'' (சிவப்பிரகாசபண்டிதர்,1954.ப.111) என சிவப்பிரகாசபண்டிதர் கூறுவது சிதம்பரத்தில் இலங்கைத்தமிழர் கொண்டிருந்த அபிமானத்தை எடுத்துக்காட்டும் சான்றாகும். சிதம்பரத்தில் மரணமெய்துவதையும் பெரும்பேறாகக் கருதினர். கோயில்களைத் தரிசிப்பதுடன் நின்றுவிடாது குறிப்பிட்ட சிலவிடங்களில் மடங்கள் கட்டுதல், கோயில்களைப் புனரமைத்தல், திருக்குளங்கள் அமைப்பித்தல் போன்ற திருப்பணிகளிலும் வடஇலங்கையர் ஈடுபட்டனர். சிதம்பரத்திலுள்ள கட்டளை மடங்களுள் எட்டுமடங்கள் யாழ்ப்பாணத்தவரின் மடங்களாகும். அவற்றுக்குத் தாவரசங்கமப் பொருட்களை வழங்கியவர்கள் யாழ்ப்பாண வர்த்தகர்களாவர். அம்மடங்களைத் தலைமையேற்று நடத்தியவர்களும் யாழ்ப்பாணத்தவரே (பூலோகசிங்கம்,1993.ப.158). அம்பலவாணநாவலர் திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் திருப்பணியில் ஈடுபட்டதோடு சிதம்பரத்தின் சந்தான ஞானசம்பந்தசுவாமிகள் மடாலயத்தையும் அமைப்பித்தார். இறந்தவரின் சாம்பலை சேதுகரையில் இடுவதற்காகவும் ஈழத்தவர் பலர் இந்தியாவை நோக்கிச் சென்றனர். குமாரசுவாமிப் புலவர் 1885 ஆம் ஆண்டு சேதுகரையில் தமது தாய் தந்தையரின் சாம்பலைக் கரைத்துத் தீர்த்தமாடி இராமேஸ்வரத்தைத் தரிசித்ததை உதாரணமாகக் கூறலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்துமதம் உன்னத நிலையைப் பெறுவதற்கு குறிப்பாக வெளிநாடுகளிலும் இந்துசமயம் அறியப்படவும் கடைப்பிடிக்கப்படவும் வழிவகுத்தவர் சுவாமி விவேகானந்தர் ஆவார். இவர் வேதாந்தத்தை முதன்மைப்படுத்தினாலும் இந்துக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தாத வகையில் தம்முடைய கருத்துக்களை முன்வைத்தார். ஆனால் இவரது ஈழத்து வருகையைத் தொடர்ந்து கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இவருக்கு அளிககப்பட்ட வரவேற்பு உபசாரம். வரவேற்பு உரைகள் சமகால இலங்கைச்சைவர்கள் அவரது பணிகளிலும், ஆற்றிய உரைகளிலும் கொண்டிருந்த அபிமானத்தை எடுத்துக்காட்டின. இது குறித்து கைலாசபதி குறிப்பிடுவது

கவனத்திற் கொள்ளத்தக்கது. "யாழ்ப்பாண இந்துக்களில் பெரும்பான்மையினர் சைவர்கள் சைவப்பற்று மிகுந்தவர்கள். சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல மெல்ல வேதாந்தத்தை ஒப்புக்கொள்ள முடியாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினார். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் சுவாமி விவேகானந்தரின் போதனைகளும், இராமகிருஷ்ண இயக்கத்தின் செய்தியும் இலங்கைத்தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக்கொள்ளச் செய்யாவிட்டாலும் பெரும்பாலானோரின் குறுகிய நோக்கையும் கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது" (Kailasapathy,1980.ப2). மேற்குறித்த மாற்றத்திற்குப் பின்னணியான விவேகானந்தரின் இலங்கைக்கான வரவு பண்பாட்டு உறவினை மேலும் வலுவடையச் செய்தது எனில் மிகையில்லை.

வேறுசில அம்சங்களுடாகவும் இருநாடுகளுக்கிடையிலான உறவுகள் விரிவடைந்திருந்தன. குறிப்பாக தமிழகத்திற்கும் வடஇலங்கைக்கும் இருந்த கலாச்சாரத் தொடர்பு காரணமாக இருநாட்டவரும் திருமணஉறவின் மூலமும் தொடர்பேற்படுத்திக் கொண்டனர். இதனால் இருநாடுகளிலும் வாழக்கூடிய வாய்ப்பினையும் பெற்றிருந்தனர். இக்காலகட்டத்தில் சமயநோக்கின் பொருட்டும், பிற தேவைகளின் பொருட்டும் அந்தணர்களும் இருநாட்டு உறவின் நெருக்கத்திற்குப் பங்களிப்புச் செய்துள்ளமையும் காணமுடிகின்றது.

## 3.2 தமிழகத்திலிருந்து இலங்கையை நோக்கிய உறவுகள்

நாவலர் காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழ்நாட்டுக்குச் சென்ற ஈழத்தவர்கள் அங்கு உயர்த்த மதிப்பினைப் பெற்றிருந்ததைக் காணலாம். இதற்கு நாவலருடைய பணிகள் பிரதான காரணமாக இருந்ததுடன் நாவலரே அவர்களுக்கு உதாரண புருஷராகத் திகழ்ந்து பல்வேறு பணிகளுக்கும் முன்னோடியாக விளங்கினார். நாவலருக்குக் கிடைத்த அங்கீகாரம் பின்வந்தவர்களின் சமய, சமூக, இலக்கியப் பணிகளுக்கு சாதகமாக இருந்தது. இதனை கைலாசபதியின் பின்வரும் கூற்றின் மூலம் அறியலாம். "நாவலர் காலத்திலும் அதற்கு மூன்றுதசாப்தங்கள் பின்னரும் சென்னை இலக்கியஉலகை யாழ்ப்பாணக் குழாத்தினரே ஆக்கிரமித்திருந்தனர்" (கைலாசபதி,1979.186). நாவலர் காலந் தொடக்கம் அவரது மறைவினைத் (1879) தொடர்ந்த 30 ஆண்டுகள் (1879 - 1900) வரையில் வடஇலங்கைத் தமிழர் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் தமிழ்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தமையை மேற்கூறிய கூற்று எடுத்துக்காட்டுகின்றது. இலக்கியத்தை முன்னிலைப்படுத்தி இக்கூற்று கூறப்பட்டுள்ளபோதும் சமகாலத்தில் சமயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, வளர்ச்சி முதலியன இலக்கியச் செழிப்புக்கு முக்கியமான காரணமாக இருந்ததெனலாம். இவ்வடிப்படையில் கைலாசபதியின் கருத்து பலதுறைகளிலும் யாழ்ப்பாணத்தவர் பெற்றிருந்த செல்வாக்கிற்கும் பொருத்தமாக அமையும்.

தமிழகத்தில் வடஇலங்கையினரது செல்வாக்கு நாவலரின் வழிவந்த தமிழ்நாட்டு மரபினர், நாவலரின் வழிவந்த யாழ்ப்பாணத்து மரபினர் என இரு வழியினரின் ஊடாகப் பரவியது. இவர்களில் பெரும்பாலானவர்கள் நாவலரது பணிகளைச் சிரமேற் கொண்டு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் இந்து மற்றும் தமிழ்ப் பண்பாடு வளரக் காரணமாக இருந்தனர். நாவலரின் தமிழ்நாட்டு மாணவர்களான இராமநாதபுரம் இராமசாமிப்பிள்ளை, நமச்சிவாயத் தம்பிரான், பொன்னோதுவார், சொக்கலிங்கச் செட்டியார், முத்தையா தம்பிரான், வன்றொண்டர் செட்டியார். சண்முகவேலர் முதலானவர்கள் நாவலரின் மாணவர் பரம்பரையில் வந்ததோடு அவர்களது வழியில் செயற்படவும் முனைந்தனர். இவர்களோடு இலங்கையிலிருந்து தமிழகத்துக்குச் சென்ற நாவலரின் மாணவர்களும், அவரது அபிமானிகளும், இவ்வழியினரின் தமிழக மாணவர்களும் மேற்கொண்ட பணிகள் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதித் தமிழக சமய, மொழி வழிப் பண்பாடு தனித்துவத்தைப் பெறக் காரணமாயின. ந.ச.பொன்னம்பலப்பிள்ளையின் தமிழக மாணவர்களான உரத்தூர் கோ. வைத்திலிங்கம்பிள்ளை, திருவாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்த சுப்பிரமணிய ஓதுவார், காரைக்குடிச் சொக்கலிங்கச் செட்டியார். பழனி குமாரசாமித்தம்பிரான் போன்றவர்கள் பாடம் கேட்டதாக அறியமுடிகின்றது (கணேசையர்,1939.பக்.75-76).

சபாபதி நாவலரின் மாணவர்களாகச் சிதம்பரம் சோமசுந்தரமுதலியார், விழுப்புரம் இராமசாமிப்பிள்ளை, மாகறல் கார்த்திகேசுமுதலியார், திருமலை சிங்காரவேமுதலியார், பாலசுந்தரமுதலியார் போன்றோர் விளங்கினர். நா.கதிரவேற்பிள்ளை, சுவாமிநாதபண்டிதர், வேல்மயில்வாகனச் செட்டியார், முருகேசர் பண்டிதர் முதலிய வடஇலங்கை அறிஞர்களுக்கும் தமிழகத்தில் பல மாணவர்கள் இருந்தனர். இம்மாணவர்கள் தமது ஆசிரியர்களைப் பின்பற்றி சமய, மொழிப் பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டினர். முருகேசபண்டிதரின் தமிழக

மாணவரில் ஒருவரான நல்லசாமிப்பிள்ளை தமிழகத்தில் சைவசித்தாந்தப் பணிகளை முன்னெடுத்தவராவர். தாம் முருகேச பண்டிதரிடம் இலக்கணம் இலக்கியம், தாக்கம், சமயம், சாஸ்திரம் முதலானவற்றைக் கற்றுக் கொண்டதாக நல்லசாமிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார் (ஈழகேசரி,10.02.1957). தமிழ்மொழிப் பணியில் சிறப்புப் பெற்றிருந்த வி.கலியாணசுந்தரம், நா. கதிரவேற்பிள்ளையிடம் கற்றதுமன்றி அவரது சரித்திரத்தையும் எழுதியுள்ளார்.

இந்தியாவுக்குச் சென்று பணியாற்றிய இலங்கையர்க்கு அங்கு கிடைத்த மதிப்பினை விளக்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களும், பதவிகளும், சன்மானங்களும் உதவுகின்றன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பழந்தமிழ் நூல் பதிப்புக்களுக்குப் பெயர் பெற்றவராக விளங்கியர் சி.வை. தாமோதரம்பிள்ளை இவரையும் யாழ்ப்பாணத்தவரையும் பற்றி நாடகப் பேராசிரியரான பம்மல் சம்பந்த முதலியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “அக்காலத்தில் யாழ்ப்பாணவாசிகளே தமிழில் நன்றாய் கற்றவர்கள் என்று மதிக்கப்பட்டனர். அவர்களுள்ளும் தாமோதரம்பிள்ளையவர்கள் சிறந்த புலமையுள்ளவர் என்று மதிக்கப்பட்டார்”(செபரத்தினம்,2001,ப.94). சி.வை தாமோதரம்பிள்ளை ‘ராவ் பகதூர்’ என்ற பட்டத்தினை அரசிடமிருந்து பெற்றிருந்தார். இவரைப் போன்று வேறுசில அறிஞர்களும் மதிப்புக்குரியவர்களாக விளங்கினர். சபாபதிநாவலர் ‘மதங் கொண்ட களிற்று யானை போல் தமிழகம் எங்கும் தமக்கிணையின்றித் திரிந்தார்’. ”எதிர்வேல் இல்லாது உலவும் கதிர்வேல்’ என்ற பெருமைக்குரியவராகவும் ‘யாழ்ப்பாண சிங்கம்’ என்று போற்றப்பட்டவராகவும் விளங்கியவர் நா.கதிரைவேற் பிள்ளை. செந்திநாதையர் சித்தாந்த சாகரமாக விளங்கி அதிற் பல பட்டங்களையும் பெற்றிருந்தார். இந்தகைய சிறப்புக்கள் இந்தியாவில் சிறப்பாகத் தமிழகத்தில் இலங்கைத்தமிழர் பெற்றிருந்த மதிப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

நீதிபதி, பரீட்சகர், ஆசிரியர் எனப் பல்வேறு பதவிகளை இவர்கள் அலங்கரித்தனர், இந்துசாதன பத்திராதிபரான தா.செல்லப்பாப்பிள்னை திருவாங்கூர் நீதிபதியாகப் பதவி வகித்தவராவர். சி.வை. தாமோதரம்பிள்ளை புதுக்கோட்டை சமஸ்தானத்து நீதிபதியாக 1890 வரை கடமையாற்றினார். பின்னர் சென்னை சர்வகலாசாலையின் திராவிட கிரந்த பரிபாலனசபையின் சென்னை விசேட அங்கத்தவர்களில் ஒருவராகவும் தமிழ்ப்பாஷையில் ஒரு பேரதிகாரியாகவும் இருந்தார். (மனோன்மணி,1983.ப.140). இலங்கையிலிருந்து சென்று தமிழகத்தில் முதன்முதலாகப் பத்திரிகை ஆசிரியராக அமர்ந்தவரும் இவரே. புலோலியைச் சேர்த்த வ.கணபதிப்பிள்ளை காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பண்டிதராகவும், திருவனந்தபுரம் மகாராஜாக் கல்லூரித் தலைமைப் பண்டிதராகவும் விளங்கினார். சிதம்பரம் பச்சையப்ப முதலியாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆங்கில வித்தியசாலையில் தமிழ்ப்பண்டிதராக கடமையாற்றியவர் பன்னாலை சிவானந்தையர். 1883இல் செந்திநாதையர் திருநெல்வேலி சைவவித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர்களைப் போன்று பல வடஇலங்கை அறிஞர்கள் தமிழகத்தில் பல்வேறு பதவிகளை வகித்திருந்தனர். இப்பதவிகள் அங்கு பல்வேறு பணிகளை முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக அமைந்திருந்தன.

19ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தில் ஆதீனங்கள் தமிழ்ப்பணியைச் சிறப்பாகவும், சமயப்பணியைப் பொதுவாகவும் ஆற்றி வந்தன. இவற்றுள் திருவாவடுதுறை ஆதீனம் தமிழுக்கும் சைவத்திற்கும் ஒரேயொரு தனிப்பீடமாக விளங்கியது. இவ் ஆதீனம் தமிழ் சைவஅறிவை மதிப்பிட்டுப் பட்டம் வழங்குமானால் அது சர்வகலாசாலைப் பட்டங்களிலும் மேலானதெனப் பண்டிதமணி குறிப்பிடுவார் (கணபதிப்பிள்ளை,1979.ப.55). இத்தகைய சிறப்புப் பெற்ற ஆதீனத்தில் நாவலரை அடுத்து வேறு சில இலங்கை நாட்டவர்களும் ”நாவலர்” பட்டத்தைப் பெற்றமை ஈழத்து அறிஞர்களது ஆற்றலையும் அதற்குக் கிடைத்த மதிப்பினையும் எடுத்துக் காட்டுகின்றது. கோப்பாய் சபாபதிநாவலர், சித்தங்கேணி அம்பலவாணர்நாவலர், தில்லைநாதநாவலர் போன்றோர் திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நாவலர் பட்டங்களைப் பெற்றமை அதுமட்டுமன்றி ஆதீனங்களின் வித்துவான்களாகவும் ஈழத்து அறிஞர்கள் விளங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. சபாபதி நாவலர் திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகரிடம் அருளுபதேசம் பெற்றுப் பன்னிரண்டு வருடங்கள் சைவசித்தாந்தம் கற்று இலக்கண, இலக்கிய, தருக்க வேதாந்த சித்தாந்த சாகரமாய் அவ்வாதீன வித்துவ சிரோமணியாய் விளங்கினார். மேலும் இவர் மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்தாரிடமிருந்து வித்துவான் பட்டத்தையும் பெற்றிருந்தார். வரணியாதீனம் யாழ்ப்பாணத்தாருடன் தொடர்புடையதாக விளங்கியது. வரணியாதீனத்தைச் சேர்ந்த சற்குருநாத சுவாமிகள் கைலாசநாத தேசிகர் யாழ்ப்பாணத்துக் கரணவாயைச் சேர்ந்தவராவர். இவரே சி.வை. தாமோதரம்பிள்ளையின் ஞானகுருவாக விளங்கினார். திருவெண்ணாமலை ஆதீனத்து

வித்துவானாக யாழ்ப்பாணத்துக் கணேசபண்டிதர் விளங்கியமையும் இவ்வாதீனத்தில் நாவலரின மாணவரான வை. ஆறுமுகப்பிள்ளை கஷாயம் பெற்றுத் தம்பிரான் ஆகியமையும் குறிப்பிடத்தக்கது. மேற்குறித்தவாறு தமிழக ஆதீனங்களில் வித்துவான்களாகவும். தம்பிரான்களாகவும். நாவலர்களாகவும் பதவி வகித்ததுமன்றி அப்பதவிகள் பட்டங்கள் அவர்களுடைய பணிகளுக்குத் துணைநின்றதையும் அவதானிக்கலாம். அத்துடன் அவர்களது பணிகளுக்குக் கிடைத்த பரிசுகளே மேற்படி பதவிகளும் பட்டங்களும் எனக் குறிப்பிடலாம்.

தமிழகத்தில் இலங்கை அறிஞர்களின் பலதரப்பட்ட பணிகளை வியந்து போற்றிப் பல சந்தர்ப்பங்களில் கௌரவித்துப் பரிசில்களும் வழங்கப்பட்டன. ஒரு சிலர் அங்கிருந்த அறிஞர்களைப் பிரபந்தங்கள் பாடிப் போற்றினர். சிவசம்புப்புலவர் எட்டுக்குடி அதீனகர்த்தா, இராமநாதபுரம் ஜாமீன்தார், பாலவருத்தம் ஜாமீன்தார், இராமநாதபுர சேதுபதி போன்றவர்களின் மதிப்பைப் பெற்றிருந்தார் (செபரத்தினம்,2001.73-74). புலவரும் இராமநாதபுர சேதுபதி மன்னரை நாயகனாக கொண்டு கல்லாட கலித்துறை. இரட்டை மணிமாலை முதலிய பிரபந்தங்களையும், பாண்டித்துரைத் தேவர் என்பவர் மீது நான் மணிமாலை என்ற பிரபந்தத்தையும் பாடியுள்ளார். இவ்விருவரது சன்மானங்களையும் சிவசம்புப் புலவரும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. சரவணமுத்துப் புலவர் சபாபதி போன்ற சிலரும் அங்குள்ள நாவலர், சுவாமிநாதபண்டிதர், உயர் பெருமக்களிடம் பல்வேறு தகைமைகளுக்காகச் சன்மானம் பெற்றவர்களாவார். இவர்கள் தமக்குக்கிடைத்த வெகுமதிகளை சமய, மொழி, சார் பணிகளின் பொருட்டுச் செலவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் தமது வாழ்வை முடித்துக் கொண்ட வடஇலங்கைத் தமிழ் அறிஞர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து இறுதியில் குறிப்பிட்ட இடத்தில் மரணித்தனர். பெரும்பாலானவர்கள் சிதம்பரத்தில் மறைந்தமை கவனிக்கத்தக்கது. சிதம்பரத்தில் மரணமெய்துவதைச் சிவப்பேறாகக் கருதியமை இதற்குக் காரணமெனலாம். ம.க.வேற்பிள்ளை, சபாபதிநாவலர். சுவாமிநாதபண்டிதர், அம்பலவாணநாவலர், செப்பறை சிதம்பரநாதசுவாமிகள், முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் போன்றவர்கள் சிதம்பரத்திலே இயற்கை எய்தினார்கள். சிவப்பிரகாசப்பண்டிதர் திருமறைக் காட்டிலும் நா.கதிரைவேற்பிள்ளை நீலக்கரிக்குன்றிலும் இயற்கை எயதினர். பல்வேறு பணிகளின் பொருட்டும், அழைப்பின் பொருட்டும் இங்கிருந்து சென்ற அறிஞர்கள் நோக்கம் நிறைவெய்தியதும். தமது தாயகத்திற்கு மீண்டதையும் அவதானிக்கலாம். இவ்வகையில் நடராசையர் குமாரசாமிப்புலவர், நல்லூர் திருஞானசம்பந்தப்பிள்ளை, சிற்கைலாசபிள்ளை, சரவணமுத்துப்பிள்ளை போன்றவர்கள் இந்தியாவிற் பணியாற்றி இலங்கையில் தம்வாழ்வின் இறுதியை முடித்துக் கொண்டனர். எங்கு மரணித்தாலும் தமிழகத்தில் இவர்கள் மேற்கொண்ட பணி 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிப் பண்பாட்டு வரலாற்றில் தனித்துவம் உடையனவாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்திற்கும் வடஇலங்கைக்கும் இடையிலான பண்பாட்டு உறவுகள் குறித்த இவ்வாய்வின் பெறுபேறு குறித்து நோக்கும்போது இக்காலப்பகுதி பற்றிய ஆய்வுகளை மேலும் முன்னெடுப்பதற்கு தூண்டுதலாக அமையுமெனலாம். ஆறுமுகநாவலர் குறித்தும் அவரது பணிகள் குறித்தும் ஆழமாக நோக்கிய அளவுக்கு அவருக்குப் பின் பணியாற்றியவர்கள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாதநிலையில் இவ்வாய்வு அதற்கு உறுதுணையாக இருக்கும். அதிலும் வடஇலங்கைத்தமிழ் அறிஞர்களின் பணிகள் தமிழகத்தில் மேலும் ஆராயப்படவேண்டியள்ளது. தமிழகத்தில் நாவலரது நிறுவனங்கள் உட்படப் பலரும் அங்கு நிர்மாணித்த பாடசாலைகள், அச்சியந்திரசாலைகள், போன்ற பல நிறுவனங்களினதும் இவர்கள் பிரசுரித்த பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் பல இனங்காணப்படாதுள்ளன. மேலும் இவர்கள் கோயில்களுக்கும் பிற நிறுவனங்களுக்கும் மேற்கொண்ட தானதர்மங்கள் பற்றி ஆவணங்களையும் தேடவேண்டியுள்ளது. இலங்கைப் பெண் பெயரிலுள்ள புண்ணியநாச்சியார் மடம் தமிழகத்தில் பிறரால் கையகப்படுத்த முயற்சி செய்யப்பட்ட வேளையில் சைவபரிபாலனசபை தலையிட்டு அதனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் இலங்கைத் தமிழறிஞர்களது பணிகள் பற்றிய ஆய்வுகளுக்கு இவ்வாய்வு களமமைத்துக் கொடுக்கும் என்பது சுட்டக்காட்டத்தக்கதாகும்.

## முடிவுரை

தமிழக – வடஇலங்கை உறவின் பின்னணியில் இக்கால கட்டத்தில் இந்துசமயம் தமிழ்மொழி போன்றவற்றின் வளர்ச்சிக்காக தமிழகத்தில் வடஇலங்கை அறிஞர்கள் பல்வேறுபட்ட பணிகளை மேற்கொண்டனர். இவர்கள் பணிகளுக்கு தமிழகத்தவரின் ஆதரவைப் பெற்றுக்கொண்டதோடு அவர்களிற் சிலரை இந்துசமய மற்றும் தமிழ்மொழி சார்ந்த பணிகளில் ஈடுபடச் செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தில் நாவலர் ஆற்றிய பணிகளால் அவரைப் பேருபகாரி எனப் பிற்கால அறிஞர் ஒருவர் குறிப்பிட்டதுபோல நாவலரை ஒத்தவாறு அங்கு பணியாற்றிய அறிஞர்களை நாவலருக்குப் பின் வந்த பேருபகாரிகள் எனக் குறிப்பிடலாம். இவர்கள் பிரசங்கம், புராணபடனம், வித்தியாசாலைகள் அமைத்தல் அதனை நிர்வகித்தல், பத்திரிகை வெளியீடு, அச்சியந்திர சாலைகள் அமைத்தல், சைவசித்தாந்தத்தை நிலைநாட்டல், கோயிற் பணிகளை முன்னெடுத்தல், கண்டனங்களை எதிர்கொள்ளல். இலக்கியஆக்கங்களை மேற்கொள்ளுதல், நூல்களை எழுதி பதிப்பித்து வெளியிடுதல் போன்ற பல்வேறு பணிகளை தமிழகத்தில் மேற்கொண்டமையானது இருநாட்டு உறவுகளும் வலுவடைவதற்குத் துணை நின்றது. சிலசமயங்களில் அறிஞர்கள் தம் பணிகளை முன்னெடுக்க முயன்ற வேளையில் இடையூறுகள், எதிர்ப்புக்கள் சிலவற்றையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தமையும் கவனிக்கற்பாலானது. ஆயினும் அவற்றையெல்லாம் புறந்தள்ளிப் பார்க்கின்றபோது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரு நாடுகளுக்கிடையேயும் தாய்-சேய் போன்ற உணர்வு மேலோங்கியிருந்தமையையும் தமிழ், சமய அடிப்படையிலான பண்பாட்டு உறவுகள் பலம் மிக்கவையாக விளங்கியதையும் அதிலும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருபிராந்தியங்களிலும் காணப்பட்ட உறவுகள் சைவ மற்றும் மொழியுணர்வவைப் வலுப்படுத்த உதவியிருந்தன என்பதை மறக்கமுடியாது. எனவே இவ்விணைப்பு தமிழக – வடஇலங்கைத் தமிழர்களின் உறவில் முக்கியமான காலகட்டதைக் குறித்து நின்றதெனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. பத்மநாதன், சி. (2000). இலங்கையில் இந்து கலாசாரம்: இலங்கை: இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.
2. வித்தியானந்தன், சு. (1969). 'தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர்' நாவலர் மாநாடு விழா மலர். கொழும்பு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை.
3. கைலாசபதி, க. (1986) ஈழத்து இலக்கிய முன்னோடிகள்: சென்னை: மக்கள் வெளியீடு.
4. சிவப்பிரகாச பண்டிதர், (1954). இந்திரகீலப்புர பெயர்த்திருக்கழிப் பாலைப்புராணம்: சிதம்பரம்: சிவசங்கர சின்னைய முதலியார் வெளியீடு.
5. பூலோகசிங்கம், பொ. (1993). ஈழம் தந்த நாவலர்: சென்னை: காந்தளகம்..
6. Kailasapathy, K. (1980). 'The impact of swami Vivekananda in Hinduism in Sri Lanka Golden jubilee of Ramakrishna mission:Sri Lanka: Sri Lanka centre.
7. கைலாசபதி, க. (1979). 'தமிழரிடையே மொழி பண்பாடு பற்றிய உணர்வு'. இனத்துவமும் சமூக மாற்றமும்: இலங்கை: சமூக விஞ்ஞானிகள் சங்கம்.
8. கணேசையர், சி. (1939). ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம். நா.பொன்னையா (பதிப்பாசிரியர்),
9. ஈழகேசரி, 10.02.1957
10. செபரத்தினம், க. (2001). ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்: சென்னை: மணிமேகலைப் பிரசுரம்.
11. மனோன்மணி, சண்முகதாஸ். (1983). சி.வை.தாமோதரம்பிள்ளை – ஓர் ஆய்வுநோக்கு: யாழ்ப்பாணம்: முத்தமிழ் வெளியீட்டுக்கழகம்.
12. கணபதிப்பிள்ளை, சி. (1979). ஆறுமுகநாவலர். சாவகச்சேரி: தென்மராட்சி பாராட்டு விழாச்சபை.

## உசாத்துணைகள்

கணேசலிங்கம். ப. (1979). "நாவலரும் செந்திநாதையரும்" கைலாசபதி. க. (பதி.) நாவலர் நூற்றாண்டு மலர். இலங்கை: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, கு. (1956). முருகேசபண்டிதர் பிரபந்தத் திரட்டு. சுன்னாகம்:

கனகரத்தினம். இரா. வை. (1996). நாவலர் மரபு. யாழ்ப்பாணம்: பூரணம் வெளியீடு.

பகவதி, கு. (1991). தமிழகம் இலங்கை ஊர்ப் பெயர்கள்- ஓர் ஒப்பாய்வு: சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.